பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**08 07 2026 WEDNESDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) இந்தோனேஷியாவில் தாம் மேற்கொண்ட அரசு முறைப்பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) எல்-நினோ தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு விஜய் இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

4) ஆசிரியர் தகுதி தேர்வு முடிவுகளை வெளியிட சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

5) உலகக்கோப்பை வில்வித்தை போட்டியி மகளிர் குழு பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>>

இந்தோனேஷியாவில் தாம் மேற்கொண்ட அரசு முறைப்பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்த இந்த பயணம் உதவியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு, கடல்சார் ஒத்துழைப்பு, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் திறன் மேம்பாடு போன்றவற்றில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான புதிய வாய்ப்புகள் இந்த பயணத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

எல்-நினோ தாக்கத்தால் ஏற்படும் பாதிப்புகளை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற உயர்நிலை ஆலோசனைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்துடன் இணைந்து பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் ஒருபகுதியாக விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான இயக்கம் நடைபெற்றதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நிலைமையை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவம் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<>>>>>>

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்து முதலமைச்சர் திரு விஜய் இன்று சென்னையில் ஆய்வு மேற்கொண்டார்.

மாநில அமைச்சர்கள் திரு ஷாஜகான், திரு சம்பத் குமார், திரு மரியவில்சன் மற்றும் உயரதிகாரிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இதனைத் தொடர்ந்து எழும்பூர் குழந்தைகள் மருத்துவமனையிலும் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக. சமூக நீதித்துறையின் செயல்பாடுகள் குறித்தும் திரு விஜய் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு வன்னியரசு, பட்ஜெட்டில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து இந்த ஆய்வின்போது விவாதிக்கப்பட்டதாக கூறினார்.

*(Sound Byte — வன்னியரசு - 30 Sec. )*

<<<<<>>>>>>

தனியார் மருத்துவக்கல்லூரிகள், நிகர்நிலை பல்கலைக்கழகங்களாக மாறுவதால் மாநில அரசுக்கு ஏற்படும் இடஒதுக்கீடு இழப்பை சரிசெய்ய மத்திய — மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நிகர்நிலை பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்படுவதால் 600-க்கும் மேற்பட்ட மருத்துவ படிப்புகளுக்கான இடங்கள் குறையும் என்று வெளியான செய்தியை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை சரிசெய்வதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>>

மத்திய அரசுக்கு எதிராக காங்கிரஸ் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை பதிவிட்டு வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குறை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழகத்தின் உரிமைகளை மத்திய அரசு பறித்துள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு மாணிக்கம் தாகூர் கூறுவது தவறானது என்றார்.

கச்சத்தீவை தாரைவார்த்து தமிழக மீனவர்களை வஞ்சித்தது காங்கிரஸ் கட்சிதான் என்றும் அவர், அதில் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு மாநிலங்களில் ஆட்சிகள் கலைக்கப்பட்டதும் காங்கிரஸ் ஆட்சி காலத்தில்தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

நதிநீர் பங்கீடு பிரச்சினைகளிலும் காங்கிரஸ் தமிழகத்திற்கு துரோகம் இழைத்துள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

ஆசிரியர் தகுதி தேர்வு முடிவுகளை வெளியிட சென்னை உயர்நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த நீதிபதி பி டி ஆஷா இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

இந்த வழக்கு விசாரணையின்போது பொதுப்பிரிவினருக்கான தகுதி மதிப்பெண்களை குறைப்பது குறித்து கொள்கை முடிவு எடுக்க உள்ளதாக தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, வழக்கின் விசாரணையை வரும் 24-ஆம் தேதிக்கு ஒத்திவைத்த நீதிபதி, தேர்வு முடிவுகளை வெளியிட இடைக்கால தடை விதித்தார்.

<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 30 Sec. )***

இதற்கிடையே, கூடலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — சரவணன் - 30 Sec. )***

<<<<<>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

ராணிப்பேட்டை மாவட்டம் பரமேஸ்வர மங்கலத்தில் 13 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக்கடையை மாநில அமைச்சர் திரு காந்திராஜ் இன்று திறந்துவைத்தார்.

---------------

சென்னை மாநகராட்சியின் தேனாம்பேட்டை மண்டலத்துக்கு உட்பட்ட **Trustlink** தெருவில் புதிதாக கட்டப்பட்ட நவீன பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தை மாநில அமைச்சர் திரு வெங்கடரமணன் இன்று திறந்துவைத்தார்.

------------------

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் பழங்குடியினருக்கான நடமாடும் சித்த மருத்துவ வாகன சேவையை ஆட்சியர் திருமதி கவிதா இன்று தொடங்கிவைத்தார்.

----------------

கடலூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மைப்பணிகளை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

---------------

தூத்துக்குடி மாநகரின் குடிநீர் விநியோகப்பாதையில் மாதாந்திர பராமரிப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் நாளை காலை ஒன்பது மணிமுதல் மாலை 4 மணிவரை மாநகரப்பகுதிகளில் குடிநீர் விநியோகம் இருக்காது என்று ஆணையர் திருமதி பிரியங்கா கூறியுள்ளார்.

---------------

காஞ்சிபுரத்தில் மாவட்ட வளர்ச்சிக்கான ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக்குழு கூட்டம் இன்று நடைபெற்றது.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை சார்பில் மக்கள் குறைதீர் கூட்டம் இன்று நடைபெற்றது.

-----------------

முதலமைச்சரின் மாநில இளையோர் விருதுக்கு வரும் 13-ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி மாலதி ஹெலன் கூறியுள்ளார்.

--------------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி அறிக்கைகளை விரைவாக நீதிமன்றங்களில் தாக்கல் செய்த 17 பேருக்கு காவல் துறை ஆணையர் திரு அமல்ராஜ் வெகுமதி மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை வில்வித்தை போட்டியில் இந்தியா மகளிர் குழு பிரிவில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஸ்பெயினின் **Madrid-**ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின், அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா — கொரியாவை வென்றது.

ஆடவர் ஒற்றையர் பிரிவுகளில் இந்தியாவின் **Ganesh Maniratnam Thirumuru, Kushal Dalal,** ரிஷப் யாதவ் ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் பிரிவுகளில் **Chikita Taniparthi, Jyothi Surekha, Prithika Pradeep** ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

இணையம் வாயிலாக நடைபெற்ற சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அர்ஜூன் எரிகைசி பட்டம் வென்றார்.

**11-**ஆவது சுற்று முடிவில் ஒன்பதரை புள்ளிகளுடன் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

----------------

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Hitesh** மற்றும் **Ganga** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் **70** கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் **Hitesh** — சீன தைபே-யின் **Jun Zhanglin** -ஐ வென்றார்.

ஆடவர் **55** கிலோ எடைப்பிரிவில் **Ganga** — மங்கோலியாவின் **Amgalanbaatar Bulgankhuu** -வை வென்றார்.

இப்போட்டியின் **19** வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **Ambekar Meetei, Aditya, Sikander, Devendra Choudhary** ஆகியோரும் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

-------------

டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் **Ishan Kishan** முதலிடத்திலும், அபிஷேக் சர்மா இரண்டாவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

---------------------

**இந்தியா — ஆஸ்திரியா இடையே 21 வயதுக்கு உட்பட்டோருக்கான இரண்டாவது மற்றும் இறுதி ஹாக்கிப்போட்டி தற்போது பெல்ஜியத்தில் நடைபெற்று வருகிறது.**

**<<<<<END>>>>>>**